OS. 87/2021

**நாள். 27.02.2023**

**வா.சா. 1 –** முருகேசன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்....

<u>1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் மொத்தம் 11 இலக்க சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என் கூடப்பிறந்தவர்கள் மொத்தம் 6 பேர். அதில் சுசிலா என்பவர் பூவாயி அம்மாளுக்கு சுமார் 2 வயதிலேயே சுவிகாரம் போய்விட்டார். என் தந்தை 27.04.2005ம் தேதி இறந்துவிட்டார். எனது தந்தை சின்னவேலு ஆடு, மாடு வைத்து விவசாயம் செய்துவந்தார். 1ம்பிரதிவாதி பழனி சுமார் 20 ஆண்டுகளாக வெளிநாட்டில் இருந்தார். 2ம் பிரதிவாதி மாடன் தனியாக விவசாய கூலி வேலை பார்த்து வந்தார். 3ம் பிரதிவாதி பூமி என்பவர் இராமநாதபுரம் மாவட்ட நீதிமன்றத்தில் வேலை பார்த்து தற்போது ஓய்வு பெற்றுவிட்டார். 4ம் பிரதிவாதி மல்லிகாவிற்கு 15, 20 வருடங்களுக்கு முன்பு திருமணமாகிவிட்டது. மல்லிகாவிற்கு திருமணம் செய்யும்போது கூட்டுக்குடும்ப வருமாணத்திலிருந்து தான் சீர்சீராட்டு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. என் அப்பாவின் தனிப்பட்ட வருமாணத்திலிருந்து தான் சீர்சீராட்டு செய்யப்பட்டது. 1ம் பிரதிவாதி வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்பி அதன் மூலம் தான் 4ம்பிரதிவாதிக்கு திருமணம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் 4ம்பிரதிவாதியின் மூத்த மகள் தீபாவை திருமணம் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு திருமணமாகி 30 வருடம் இருக்கும். நான் ஆசிரியராக அரசுப்பணியில் இருக்கிறேன் என்றால் சரிதான். 1ம் இலக்க சொத்தை என் தகப்பனார் 1955ல் கிரயம் வாங்கினார் என்றால் சரிதான். பூர்வீகச் சொத்தில் இருந்து கிடைத்த வருமாணத்தை கொண்டு தான் என் தகப்பனார் 1ம் இலக்க சொத்தை கிரயம் வாங்கினார் என்றால் சரியல்ல. 1ம் இலக்க சொத்தில் 2ம் பிரதிவாதி மாடன் 25 வருடங்களுக்கு முன்பு வீடு கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. அவர் வீடு கட்டியுள்ளார் என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பழனி 18 ஆண்டுகளுக்கு முன்பே 1ம் இலக்க சொத்தில் வீடு கட்டியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. 3ம் பிரதிவாதி பூமி கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பே 1ம் இலக்க சொத்தில் வீடு கட்டியுள்ளார் என்று

சொன்னால் சரிதான். பாகம் பிரிக்கப்படாத சொத்தில் அனைவருடைய ஒப்புதலின் பேரில் வீடு கட்டியுள்ளார். நான் 1ம் இலக்க சொத்தில் 02.07.2004ல் என் தகப்பனார் எனக்கு எழுதிக்கொடுத்த இனாம்செட்டில்மென்ட் பத்திரத்தின் அடிப்படையில் நான் வீடு கட்டிவிட்டேன். 1 முதல் 3 பிரதிவாதிகள் கடந்த 20 வருடங்களுக்கு முன்னாலேயே எனக்கும், என் தகப்பனாருக்கும் தெரிந்த 1ம் இலக்க சொத்தில் வீடுகட்டி குடியிருந்து வருகிறார்கள் என்றும் அவரவர்களுக்கு அவர்களுடைய தந்தை காலத்திலேயே வாய்மொழியாக பாகம் பிரிக்கப்பட்டு அவர்அவர்கள் சொத்துக்களில் வீடுகட்டி குடியிருந்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. தாவா 2ம் இலக்க சொத்திற்கு சர்வே நம்பர்.391/13. அது மொத்தம் 75 சென்ட் ஆகும். அந்த சொத்தினை வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்யப்பட்டு அவர்அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்தினை அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. 3 மற்றும் 4ம் இலக்க சொத்துக்கள் ஒரே மாதிரியாக சேர்ந்த சொத்துக்கள் என்றால் சரிதான். 3, 4 இலக்க சொத்துக்களின் மொத்த விஸ்தீரணம் சுமார் 4 ஏக்கர் இருக்கும். 3ம் இலக்க சொத்தில் அரசினால் புறவழிச்சாலைக்கு நிலம் கையகப்படுத்தப்பட்டது என்று சொன்னால் சரிதான். அந்த இழப்பீட்டு தொகையினை அரசாங்கம் எங்களுக்கு சமபாகமாக பிரித்துக்கொடுத்துவிட்டது. பிராது 5 முதல் 11 இலக்க சொத்துக்கள் என் தகப்பனாருக்கு பூர்வீக சொத்துக்கள் என்று சொன்னால் சரிதான். அச்சொத்தை பொறுத்தும் வாய்மொழியாக பாகப்பிரிவினை ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.13 வழக்கறிவிப்பை நானும், 3, 4 பிரதிவாதிகளும் சேர்ந்து தான் 1, 2 பிரதிவாதிகளுக்கு 12.08.2021 அன்று அனுப்பினோம் என்று சொன்னால் சரிதான். 3, 4 பிரதிவாதிகள் அந்த சமயத்தில் மதுரையில் இருந்ததால் அவர்களோடு சேர்ந்து வழக்கு தாக்கல் செய்ய முடியவில்லை. 1ம் இலக்க சொத்தில் 3ம் பிரதிவாதி வீடுகட்டும்போது எங்களிடம் எழுத்து மூலமாக ஒப்புதல் வாங்கவில்லை. தாவா 10ம் இலக்க சொத்தின் மொத்த விஸ்தீரணம் 11 சென்ட். 1 சென்ட் கீழ்புரம் பாதைக்கு போக மீதி 10 சென்ட் உள்ளது. 10ம் இலக்க சொத்திலும் 3ம் பிரதிவாதி பூமி ஏற்கனவே ஓட்டுவீடு கட்டி தற்போது இடிந்துவிட்டதால் காலியிடம் வைத்து அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. கூட்டு அனுபவமாக தான் இருந்து வருகிறது. 1ம் பிரதிவாதி பழனி 3ம் பிரதிவாதி வீட்டிற்கு மேற்கே 20 ஆண்டுகளுக்கு முன்னால் வீடுகட்டி குடியிருந்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. 2ம்

பிரதிவாதி மாடன் என்பவரும் 15 வருடங்களுக்கு முன்னாலேயே அந்த இடத்தில் வீடு கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. தாவா வழக்கிற்கு 1 வருடத்திற்கு முன்னால் தான் வீடு கட்டியுள்ளார். நீதிமன்றத்திலிருந்து ஆணையர் நியமனம் செய்யப்பட்டு இடத்தை பார்வையிட்டால் பிரதிவாதிகள் எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு வீடுகட்டியுள்ளார்கள் என்ற விவரம் தெரியவரும் என்றால் சரிதான். 1ம் இலக்க சொத்திலும், 10ம் இலக்க சொத்திலும் 1, 2 பிரதிவாதிகள் வீடு கட்டும்போது நாங்கள் ஆட்சேபனை செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஆட்சேபனை செய்தோம். ஆட்சேபனை செய்து காவல் நிலையத்தில் மனு எதுவும் கொடுக்கவில்லை. நாங்கள் எங்கள் தகப்பனார் காலத்திலேயே தாவா சொத்துக்களை வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்து தனித்தனியாக அனுபவம் செய்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களை பிரித்து அதில் 4ம் பிரதிவாதியின் மகளை நான் திருமணம் செய்துள்ளா காரணத்தால் 4ம் பிரதிவாதிக்கும் 1 பங்கு தனிப்பட்ட முறையில் 1/5 பங்கு கிடைக்க வேண்டும் என்பதற்காக உண்மையை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே எங்களுக்குள் பாகப்பிரிவினை ஆகிவிட்டதால் தாவா வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

3, 4 பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

(2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்கு ஒத்திவைக்கப்படுகிறது)